මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව | செயலகம், கொழும்பு 01, இலங்கை. | The Secretariat, Colombo 01, Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011-2484500, 011-2484600, 011-2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011-2449823
වෙබ් අඩවිය / இணையதளம் / Website: www.treasury.gov.lk


මගේ අංකය / எனது இல / My No: NPD/DCB2024/Gen
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2023.12.29

நிதி அமைச்சின் சுற்றறிக்கை : MF/02/2023

அனைத்து மாவட்ட செயலாளர்களுக்கும்,

**<u>பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டம் – 2024</u>**

2024 வருடத்திற்குரிய அரசாங்க வரவு செலவுத் திட்டத்தினூடாக முறையான கிராமிய அபிவிருத்தி மூலம் பிரதேச ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்து நாட்டின் நிலையான அபிவிருத்தியை இலக்காகக் கொண்டதுடன் வலுவான கிராமிய பொருளாதாரத்தை உருவாக்குவதன் மூலம் பாரிய பொருளாதார இலக்குகளை அடைவது எதிர்பார்க்கப்படுகிறது. அந்த இலக்குகளை அடைவதற்காக தேசிய பணிக்கு பங்களிப்பை வழங்கும் நோக்கத்துடன் 2024 ஆம் ஆண்டில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்படும்.

2024 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திற்கான ஒதுக்கீடுகள் ஜனாதிபதி செயலகத்தின் செலவினத் தலைப்பின் கீழ் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நிரல் அமைச்சுக்கள், மாகாண சபைகள் மற்றும் பிற நிறுவனங்களால் நிதி ஒதுக்கப்படாத பொருளாதார, சமூக, சமய மற்றும் கலாசார நடவடிக்கைகளை விருத்தி செய்வதற்குத் தேவையான பௌதீக உட்கட்டமைப்பை உருவாக்குதல் அல்லது சமூக நலனை இலக்காகக் கொண்ட கருத்திட்டங்களிற்காக பன்முகபபடுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளை முறையாக முதலீடு செய்வதை உறுதிப்படுத்தலானது உங்கள் மீது ஏற்படுத்தப்பட்டுள்ள பொறுப்பாகும்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டத்தின் கீழ் கருத்திட்ட முன்மொழிவுகளை செயற்படுத்துவதற்கு வசதியாக பின்வரும் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன. 2024 ஜனவரி 31 இனுள், பின்வரும் துறைகளின் கீழ் செயற்படுத்தக்கூடிய கருத்திட்ட முன்மொழிவுகள் தொடர்புடைய தரப்பினரிடமிருந்து பெறப்பட்டு, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் ஒப்புதலுடன் நிதி ஒதுக்கீடுகளைப் பெறுவதற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான ஏற்பாடுகள் ஜனாதிபதி செயலகத்தினால் உங்களுக்கு வழங்கப்படும்.

**1. கருத்திட்டத்தை இனங்காணல்**

1.1. 2024 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக நீங்கள் உட்பட மாகாண ஆளுநர்கள், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்கள் மற்றும்

அனைத்து பிரதம செயலாளர்களிற்கும் கௌரவ ஜனாதிபதி மற்றும் கௌரவ பிரதமர் ஆகியோரால் அழைப்பு விடுக்கப்பட்ட கூட்டங்களின் மூலம் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதை நினைவு கூர்கிறேன்.

1.2. அதன் பிரகாரம் முதலில், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் தலைமையில் 2024 ஜனவரி மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பதாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுப் பிரதிநிதிகள் மற்றும் மாவட்ட மட்டத்திலான நிறுவனங்களின் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்து இது தொடர்பாக அறிவிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

1.3. உங்கள் மாவட்டத்திற்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட மொத்த ஒதுக்கீடு இணைப்பு 1 அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், மக்கள் தொகை, வறுமை, நிலப் பரப்பு, கிராம அலுவர் பிரிவுகளின் எண்ணிக்கை மற்றும் இப்பகுதிக்கு தனித்துவமான விஷேட அபிவிருத்தித் தேவைகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவு மற்றும் அல்லது கிராம அலுவலர் பிரிவுகளிற்கும் ஒதுக்கப்பட்ட மொத்த ஒதுக்கீட்டின் அளவை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவினூடாக தீர்மானிக்க முடியும்.

1.4. அதே நேரத்தில், பிரதேச செயலாளர் ஊடாக பிரதேச ஒருங்கிணைப்புக் குழு, பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரின் தலைமையில் விரைவாக கூட்டப்பட்டு, பிரதேச செயலகப் பிரிவிலுள்ள அரசியல் பிரதிநிதிகள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பிரதேச செயலகப் பிரிவின் அனைத்து அரசாங்க உத்தியோகத்தர்களிற்கும் தெரிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.5. பிரதேச செயலாளரின் மேற்பார்வையின் கீழ் கிராம அலுவலர் பிரிவு மட்டத்தில், உள்ளூராட்சி மன்ற அரசியல் பிரதிநிதிகள், சமூக மற்றும் கிராம அலுவலர் பிரிவு மட்டத்தில் சேவைகளை வழங்கும் அரச நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் அப்பகுதி மக்களை ஒன்று திரட்டி வேலைத் திட்டம் தொடர்பாக போதிய விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதினூடாக ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிற்காக கீழே “2. அபிவிருத்திப் பிரிவுகள்" என்பதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளின் பிரகாரம் கருத் திட்டங்கள் இனங்காணப்படல் வேண்டும்.

1.6. மேலே உள்ள 1.5 இன் பிரகாரம், கிராம அலுவலர் பிரிவினால் இயன்ற அளவு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் மற்றும் பிரதேச செயலாளரின் தலைமையின் கீழ் சமூகத்திற்கு தெரியப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதுடன், ஆகக் குறைந்தது அவர்களால் பெயரிடப்பட்ட பிரதிநிதிகள் / உத்தியோகத்தர்கள் மூலம் இந்நிகழ்வுகளை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.7. கிராம அலுவலர் பிரிவில் சமுதாயத்திற்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் கருத்திட்டங்களை இனங்காண்பதற்குமான நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்த பிரிவின் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தரின் பொறுப்பாகும். ஏதேனும் ஒரு கிராம அலுவலர் பிரிவில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு வெற்றிடம் ஏற்பட்டால் அல்லது அப்பதவியில் இருக்கும் உத்தியோகத்தரிடம் இருந்து இவ்வேலைத் திட்டத்திற்கு போதிய பங்களிப்பை பெறுவதில் சிரமம் ஏற்பட்டாலோ, தகுந்த உத்தியோகத்தர் ஒருவர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருடன் கலந்தாலோசித்து பிரதேச செயலாளலரினால் நியமிக்கப்படல் வேண்டும்.

1.8. கிராம அலுவலர் பிரிவினுள் சமுதாய விழிப்புணர்வை ஏற்படுத்தி **2024 ஜனவரி 31 இற்கு** முன்பதாக நிகழ்த்தி கருத்திட்டங்கள் இனங்காணப்படுதலானது பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

1.9. இனங்காணப்பட்ட கருத்திட்டங்களின் நம்பகத்தன்மையை தொடர்புடைய அரச நிறுவனங்களின் பங்களிப்புடன் ஒரு வாரத்தினுள் விரைவாக உறுதிப்படுத்துவதுடன் பிரதேச செயலகத்தின் கருத்திட்ட முன்மொழிவுப் பட்டியலை மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் அனுமதியை பெற்றுக்கொள்வதற்காக பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் பரிந்துரையுடன் மாவட்ட செயலாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

1.10. உங்களது மாவட்டத்திற்கு ஒதுக்கப்படும் மொத்த நிதி ஒதுக்கீட்டில் **குறைந்தபட்சம் 50%** இனை பௌதீக உட்கட்டமைப்பு அபிவிருத்தி கருத்திட்டங்களிற்காக (நிர்மாணம்) ஒதுக்குவதை உறுதி செய்து கொள்ளவும்.

1.11. நிர்மாணம் மற்றும் புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு செய்வதற்கு முன்பதாக, எதிர்காலத்தில் எவ்வித இடையூறும் இல்லாமல் நிர்மாணத்தை உத்தேசித்த நோக்கத்திற்காக பயன்படுத்த முடியும் என்பதையும், பராமரிப்புப் பணிகளுக்கு முறையான அமைப்பு தயாரிக்கப்பட்டுள்ளது என்பதையும் மாவட்டச் செயலாளர் / பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

1.12. நிர்மாணப் பணிகளுக்கு (காணி உரிமையை அனுமதித்தல், சங்கங்களைப் பதிவு செய்தல், வளங்களின் அவசியத்தன்மை, அவசியமெனின் பிற நிறுவனங்களின் ஒப்புதலைப் பெறுதல்) இணைப்பு 2 இல் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் பிரதேச செயலாளரால் சாத்தியக்கூறு அறிக்கையைப் பெற வேண்டும்.

1.13. கீழே உள்ள 2.14 இன் கீழ் தவிர்ந்த, இவ்வொதுக்கங்களின் கீழ் பொது நோக்கங்களுக்காக கருத் திட்டங்கள் செயற்படுத்தப்படுவதுடன் தனிநபர்கள் அல்லது தனிப்பட்ட விடயங்களிற்காக நேரடியாக மானியங்கள் வழங்கப்படக்கூடாது.

1.14. கீழே உள்ள 2.15 இன் கீழ் கருத்திட்டங்களைப் பரிந்துரைப்பதற்கு முன்பாக, மேற்கூறிய முதலீட்டின் மூலம் நிச்சயமாக உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்புக்களின் எண்ணிக்கை, பிரதேச வளங்களைப் பயன்படுத்துதல், பெறுமதி சேர்ப்பு, சந்தை, விநியோக வலையமைப்பு மற்றும் வருமான விநியோகம் போன்ற குறிப்பிட்ட காரணிகளின் பகுப்பாய்வுகளை மேற்கொண்டு பிரதேச செயலாளரின் விஷேட பரிந்துரையுடன் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் ஒப்புதலுக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

## 2. அபிவிருத்திப் பிரிவு

2.1 கொவிட் தொற்றுநோய் மற்றும் அதன் பின்னரான பொருளாதார நெருக்கடியால் இது வரையில் தற்காலிகமாக நிறுத்தப்பட்ட, அரசாங்க ஒதுக்கீட்டின் மூலம் செயற்படுத்தப்பட்டு இறுதி நிலையில் காணப்படுவதும் மேலும் குறைந்த செலவில் பூரணப்படுத்த இயலுமான அபிவிருத்திக் கருத்திட்டங்களை (நிர்மாணம்) மக்களுக்கு சேவைகளை வழங்கக்கூடிய அளவிற்கு பூர்த்தி செய்தல்.

2.2 சுற்றுலாத் துறைக்கு கவர்ச்சிகரமாக உள்ள பகுதிகளில் பொது வசதிகளை ஏற்படுத்தல்.

2.3 கிராமிய சமூக குடி நீர் விநியோகக் கருத்திட்டம்.

2.4 சிறிய அளவிலான கிராமப்புற மின்மயமாக்கல் கருத் திட்டங்கள் / சிறு அளவிலான மின்சாரத்தின் விரிவாக்கம் (இலங்கை மின்சார சபை இந்தத் திட்டங்களை 2024க்குள் செயல்படுத்தி முடிக்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும்) மற்றும் அரச நிறுவனங்கள் மற்றும் மத ஸ்தானங்களிற்கு கூரையில் பொருத்தப்பட்ட சூரிய சக்தி (Solar Panel) அமைப்புகளை வழங்குதல்.

2.5 மாகாண வீதிகள், கிராமப்புற வீதிகள், நடைபாதைகள், படிக்கட்டுக்கள், பாலங்கள், மதகுகள், மரப்பாலங்கள், கேபிள் பாலங்கள், வீதியோர வடிகால் அமைப்புகள் போன்ற கிராமப்புற போக்குவரத்து வசதிகளை வழங்குதல் மற்றும் மேம்படுத்துவதற்கான கருத்திட்டங்கள்.

2.6 உற்பத்திப் பொருட்களுக்கு அதிக மதிப்பு / அதிக விலையைக் கொடுக்கும் பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்த உதவுகின்ற வார சந்தை / கடைத் தொகுதிகள் / விற்பனை மையங்களின் பௌதீக உள்கட்டமைப்பை உருவாக்குதல்/நவீனப்படுத்துதல் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய சுகாதார வசதிகளை உருவாக்குதல் / மேம்படுத்துதல்.

2.7 முன் பள்ளி மற்றும் இடைநிலைப் பள்ளிகள், கிராமப்புற மருத்துவமனைகள், கிராமப்புற மருந்தகங்கள் (Dispensary and ஆயுர்வேத மருந்தகங்கள்) மற்றும் மகப்பேறு மற்றும் குழந்தைகள் மருத்துவமனைகள் என்பவற்றின் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தல் அல்லது மேம்படுத்தல் / பொருட்களை வழங்குதல் மற்றும் அவற்றின் அணுகலிற்கான பிரவேசப் பாதையை விருத்தி செய்தல்.

2.8 கிராமப்புற விளையாட்டு மைதானங்கள் மற்றும் நூலகங்களுக்கான வசதிகளை உருவாக்கி அபிவிருத்தி செய்வதற்கான கருத்திட்டங்கள்.

2.9 சிறிய நீர்ப்பாசனத்தின் கீழ் சிறிய குளங்கள், வண்டல்கள், வாய்க்கால்கள், நீர்ப்பாசன நிலையங்கள் மற்றும் குளங்கள், கிணறுகள், குழாய் கிணறுகள் ஆகியவற்றை நிர்மாணித்தல் மற்றும் புதுப்பித்தல்.

2.10 விவசாய அபிவிருத்தியுடன் தொடர்புடைய விவசாய வீதிகள், தானியம் உலர்த்தும் தரை உள்ளிட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள்.

2.11 பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் / சமூகம் சார்ந்த நிறுவனங்கள், முன்பள்ளிகள், சிறுவர் இல்லங்கள் மற்றும் முதியோர் இல்லங்களுக்கான வசதிகளை ஏற்படுத்தல் / உபகரணங்களை விநியோகித்தல்.

2.12 மதஸ்தானங்கள், பதிவுசெய்யப்பட்ட சமயப் (தஹம்) பாடசாலைகள், சமய மற்றும் கலாசார மையங்களிற்கு வசதிகளை ஏற்படுத்தல் / உபகரணங்கள் வழங்குதல் மற்றும் பொது மயானங்களை புனரமைத்தல்.

2.13 காட்டு விலங்குகளிடமிருந்து குடியிருப்புகள் மற்றும் பயிர்களுக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களை அகற்ற அல்லது குறைக்கும் முன்மொழிவுகள்.

2.14 சமுர்த்தி திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் வறிய குடும்பங்களை மேம்படுத்தும் வேலைத் திட்டத்திற்கு (Graduation program) தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு வாழ்வாதார நடவடிக்கைகளுக்கு தேவையான வசதிகளை வழங்குதல்.

2.15 தொழில்துறை சங்கங்கள் மற்றும் தொழில்முனைவோர் கிராமங்களை மேம்படுத்துதல் மற்றும் புதிய தொழில்நுட்பத்தை விநியோகித்தல் போன்ற தொழில்முனைவோர் அபிவிருத்தித் கருத்திட்டங்கள்.

2.16 இயற்கை அனர்த்தங்களால் முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ அழிந்துபோன உட்கட்டமைப்பு வசதிகளை மறுசீரமைத்தல்.

2.17 கிராமியப் பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்கு பிரதேச ரீதியாக நடைமுறைப்படுத்தக்கூடிய பரிந்துரைகள்.

2.18 முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய மற்றும் பல் பரிமாண வறுமைக் குறியீட்டைக் கருத்திற்கொண்டு [Multidimensional Poverty Index (MPI)] முன்மொழியப்பட்ட கருப்பொருளிற்கு இணக்கமான வேறு முன்மொழிவுகள்.

## 3. கருத்திட்டங்களின் அங்கீகாரம், ஒதுக்கீடுகளை விடுவித்தல் மற்றும் செயற்படுத்தல்

3.1 பிரதேச செயலக மட்டத்தில் உங்களுக்கு அபிவிருத்தி முன்மொழிவுகள் கிடைக்கப்பெற்றவுடன், அம்முன்மொழிவுகள் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக உள்ளதா என்பதை உறுதிப்படுத்தி, 2024 பெப்ரவரி 15 இற்கு முன்பதாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதியுடன் இணைப்பு 03 இற்கு அமைவாக தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

3.2 தேசிய திட்டமிடல் திணைக்களத்தினூடாக குறித்த முன்மொழிவுகள் ஆராயப்பட்டு ஒதுக்கீட்டை விடுவிப்பதற்காக ஜனாதிபதி செயலகத்திற்கு சமர்ப்பிக்கப்படும். இதன் பிரகாரம், கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான நிதி ஒதுக்கீடுகளை ஜனாதிபதி செயலகத்தினால் விடுவிக்கப்படும்.

3.3 2024 ஆம் ஆண்டின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் அனுமதியளிக்கப்பட்ட கருத்திட்டங்கள் 2024 ஜூலை 31 இற்கு முன்பதாக பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

3.4 பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகள் தவிர்க்க முடியாத காரணங்கள் தவிர 2024 ஏப்ரல் 30 க்குப் பின்னர் திருத்தங்களிற்கு உட்படாமல் இருத்தல் வேண்டும். இவ்வாறு திருத்தங்களிற்கு உட்படும் கருத்திட்டங்களைச் செயற்படுத்த மேற்கண்ட 3.1, 3.2 மற்றும் 3.3 வழிமுறைகள் பின்பற்றப்படல் வேண்டும்.

3.5 அனைத்து கருத்திட்டங்களும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட விதிகள், சுற்றறிக்கைகள், பெறுகை வழிகாட்டுதல்கள் மற்றும் நிதி விதிமுறைகளின் பிரகாரம் செயற்படுத்தப்படல் வேண்டும்.

## 4. வேலைத்திட்ட மேற்பார்வை

4.1. 2024 பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் முன்னேற்றம் வாரந்தோறும் பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் மதிப்பாய்வு செய்யப்படல் வேண்டும். அதற்கு, மாவட்ட திட்டமிடல் பணிப்பாளரின் கீழ் பொருத்தமான செயன்முறையொன்று தயாரிக்கப்படல் வேண்டும்.

4.2. 2024 ஆம் ஆண்டிற்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படும் கருத்திட்டங்கள் தேசிய அளவில் பொதுத் திறைசேரியின் கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் மேற்பார்வைத் திணைக்களத்தால் மேற்பார்வை செய்யப்படுவதுடன், அது தொடர்பான அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதல்கள் எதிர்காலத்தில் அத்திணைக்களத்தால் வெளியிடப்படும்.

4.3. முழு நிகழ்ச்சித்திட்டமும் கௌரவ பிரதமரின் தலைமையில் நிறுவப்பட்டுள்ள அமைச்சரவைத் துணைக் குழுவினூடாக மேற்பார்வை செய்யப்படுவதுடன் பொதுத் திறைசேரியின் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வைத் திணைக்களம், முன்னேற்றம் மற்றும் தேவையான தகவல்களை அத்துணைக்குழுவிற்கு வழங்கும்.

## 5. வேறு விடயங்கள்

5.1. நிர்மாண கருத்திட்டங்களுக்கான ஒவ்வொரு கருத்திட்டத்தின் மதிப்பில் 3% இற்கு விஞ்சாமல் ஒரு ஒதுக்கீடும், நிர்மாணம் அல்லாத கருத்திட்டங்களுக்கு 1% இற்கு விஞ்சாமல் ஒரு ஒதுக்கீடும் நிர்வாகச் செலவுகளாக ஒதுக்கப்படுவதுடன், அவை பின்வருமாறு பயன்படுத்தப்படும்.
(அ) மாவட்டச் செயலகப் பணிகளுக்காக 25% இற்கு விஞ்சாமல்
(ஆ) பிரதேச செயலகம் மற்றும் செயற்படுத்தும் நிறுவனங்களின் பணிகளுக்காக 75% இற்கு விஞ்சாமல்

5.2. இவ்வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மாவட்ட செயலகம், பிரதேச செயலகம், மாகாண சபை, உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரச நிறுவனங்களுடனும் இணைக்கப்பட்டுள்ள தொழினுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் தொழினுட்ப உதவி உத்தியோகத்தர்களின் சேவைகள் அதிகபட்சமாக பெறப்படல் வேண்டும்.

5.3. இவ்வேலைத்திட்டத்தின் கீழ் 2024 ஆம் ஆண்டினுள் நடைமுறைப்படுத்தப்பட்டு பூர்த்தி செய்ய முடியுமான கருத்திட்டங்கள் மட்டுமே இனங்காணப்படல் வேண்டும். 2024 ஆம் ஆண்டிற்குப் பின்பும் தொடரப்படும் கருத்திட்டங்கள் கருத்தப்படலாகாது.

5.4. முந்தைய வருடங்களைப் போன்று இவ்வருடமும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திற்கான கருத்திட்டங்களைத் தயாரிப்பதற்கும் வேலைத்திட்டத்தை ஒருங்கிணைப்பதற்கும் தேவையான பங்களிப்பை வழங்குவதற்கு மாவட்ட திட்டமிடல் செயலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள இரண்டு பிரதி / உதவி பணிப்பாளர்கள் (திட்டமிடல்) நியமிக்கப்படல் வேண்டும்.

5.5. பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் 2024 இற்குரிய நேர அட்டவணை உட்பட செயற்படுத்தும் திட்டம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது (இணைப்பு 04)

5.6. பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் 2024 இன் மூலம் செயற்படுத்தப்படும் கருத்திட்டங்களுக்குச் செலுத்தப்படும் அனைத்து வரிகள் மற்றும் பிற கொடுப்பனவுகள் இவ்வேலைத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஒதுக்கீடுகளால் ஈடுசெய்யப்படுவதுடன் அதற்கான மேலதிக ஒதுக்கீடுகள் எதுவும் கிடைக்கப்பெற மாட்டாது.

5.7. இச்சுற்றறிக்கையில் உள்ளடக்கப்படாத பணிகள் இருப்பின், அக்கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் விசேட அங்கீகாரம் பெறப்படல் வேண்டும்.

ஒப்பம் : / கே. எம். மஹிந்த சிறிவர்தன
செயலாளர்

பிரதிகள் -

1. கௌரவ மாகாண ஆளுநர்கள் - தயவுடன் தகவலிற்காக
2. அனைத்து மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்கள் - தயவுடன் தகவலிற்காக
3. ஜனாதிபதியின் செயலாளர் - தயவுடன் தகவலிற்காக
4. பிரதமரின் செயலாளர் - தயவுடன் தகவலிற்காக
5. அனைத்து மாகாண பிரதம செயலாளர்கள் - தயவுடன் தகவலிற்காக
6. கணக்காய்வாளர் தலைமை அதிபதி, கணக்காய்வாளர் திணைக்களம் - தயவுடன் தகவலிற்காக
7. செயலாளர், பொது நிர்வாக, உள் நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு - தயவுடன் தகவலிற்காக
8. செயலாளர், மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு - தயவுடன் தகவலிற்காக
9. பணிப்பாளர் நாயகம், தேசிய திட்டமிடல் திணைக்களம் - தயவுடன் தகவலிற்கு மற்றும் அ. ந
10. பணிப்பாளர் நாயகம், தேசிய வரவு செலவு திட்ட திணைக்களம் - தயவுடன் தகவலிற்கு மற்றும் அ. ந
11. பணிப்பாளர் நாயகம், கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் மேற்பார்வைத் திணைக்களம் - தயவுடன் தகவலிற்கு மற்றும் அ. ந
12. பணிப்பாளர் நாயகம், திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களம் - தயவுடன் தகவலிற்கு மற்றும் அ. ந
13. பணிப்பாளர் நாயகம் - சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் - தயவுடன் தகவலிற்கு மற்றும் அ.ந
14. அனைத்து மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர்கள் - தயவுடன் தகவலிற்கு மற்றும் அ. ந
15. அனைத்து பிரதேச செயலாளர்கள் - தயவுடன் தகவலிற்கு மற்றும் அ. ந